கூட்ட எண் 08 | நகராட்சி அலுவலகம்,
2018 - 2019 -ம் ஆண்டு | ஆரணி,
நாள் 10.09.2018.

2018-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10.09.2018 ந் தேதி திங்கட்க் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள்கள்

1. அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 ஆகியவற்றில் 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018ல் சொத்துவரி பொது சீராய்வு தொடர்பான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்க்ணட அரசாணைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் கீழ்கண்டுள்ளவாறு சொத்துவரி உயர்வு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | கட்டிடப் பயன்பாடு விபரம் | 01.04.2018ம் தேதி முதல் சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகை குடியிருப்புகள்) | 50 சதவீதத்திற்கு மிகாமல் |
| 2. | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டிடங்கள் | 100 சதவீதத்திற்கு மிகாமல் |

மேலும் , நகராட்சிப் பகுதியிலுள்ள தெருக்கள் / சாலைகள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரித்து அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும், அதனடிப்படையில் சொத்துவரி சீராய்வு செய்யவும், மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி, ஆரணி நகராட்சி பகுதிகளிலுள்ள 166 தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், A, B மற்றும் C ஆகிய மூன்று மண்டலங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள்/ தெருக்களில் உள்ள கட்டிடங்களுக்கு ஒரு சதுர அடிக்கு கீழ்கண்டுள்ளவாறு அடிப்படை மதிப்பு உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள அடிப்படை மதிப்பு (ரூ./சதுர அடி) | உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டு உள்ள அடிப்படை மதிப்பு (ரூ./சதுர அடி) |
|---|---|---|---|---|
| 1 | A | 57 | 2.00 | 3.50 |
| 2 | B | 78 | 1.50 | 2.50 |
| 3 | C | 31 | 1.00 | 1.60 |

அரசாணை எண். 73 மற்றும் 76, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி, 01.04.2018ம் தேதி முதல் ஆரணி நகராட்சி பகுதிகளிலுள்ள அனைத்து கட்டிடங்கள் பொது சொத்துவரி சீராய்வு செய்திடவும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, இந்நகராட்சி பகுதியிலுள்ள சாலைகள்/ தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மணடலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திற்கும் அடிப்படை மதிப்பு (Zone Value) நிர்ணயம் செய்யவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி 01.04.2018ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவிகிதற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட அனுமதிக்கலாம்.
2. ஆரணி நகராட்சியில் உள்ள 166 சாலைகள் / தெருக்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. அ) மண்டலம் A-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.2.00 லிருந்து ரூ. 3.50 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மண்டலம் B-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.1.50 லிருந்து ரூ. 2.50 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மண்டலம் C-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ. 1.00லிருந்து ரூ. 1.60 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

4. மேற்கண்டவாறு A , B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அம்மண்டலங்களுக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள்/ தெருக்களில் புதியதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு உயர்வு செய்யப்பட்டுள்ள அடிப்படை மதிப்பின்படி சொத்துவரி நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| ARANI MUNICIPALITY REVISED ZONE | | | | | |
|---|---|---|---|---|---|
| Sl No | WD_CODE | ST_CODE | தெருக்களின் பெயர் | EXISTING ZONE | REVISED ZONE |
| 1 | WD-01 | 1 | அருந்ததி தெரு | C | C |
| 2 | WD-01 | 2 | காந்தி ரோடு | A | A |
| 3 | WD-01 | 3 | புதுகாமூர் தெரு | **C** | B |
| 4 | WD-01 | 4 | தருமராஜா கோவில் தெரு | B | B |
| 5 | WD-01 | 5 | கே.கே.நகர் | A | A |
| 6 | WD-02 | 1 | குப்பன் தெரு | **B** | A |
| 7 | WD-02 | 2 | ஆறுமுகம் தெரு | **B** | A |
| 8 | WD-02 | 3 | இராஜாஜி தெரு | B | B |
| 9 | WD-02 | 4 | காந்தி ரோடு | A | A |
| 10 | WD-03 | 1 | மஹாவீரர் தெரு | B | B |
| 11 | WD-03 | 2 | வெற்றிலகர தெரு | B | B |
| 12 | WD-03 | 3 | சாந்தா தெரு | C | C |
| 13 | WD-04 | 1 | பிள்ளையார் கோவில் தெரு | **B** | A |
| 14 | WD-04 | 2 | மோகனன் தெரு | B | B |
| 15 | WD-04 | 3 | போலீஸ் ஸ்டேஷன். தெரு | B | B |
| 16 | WD-04 | 4 | கலாச்கார தெரு | **B** | A |
| 17 | WD-05 | 1 | திருமலை தெரு | C | C |
| 18 | WD-05 | 2 | வராகமூர்த்தி தெரு | C | C |
| 19 | WD-05 | 3 | வீராசாமி தெரு | B | B |
| 20 | WD-05 | 4 | பெருமாள் தெரு | B | B |
| 21 | WD-05 | 5 | கெஞ்சி அருணகிரி தெரு | B | B |
| 22 | WD-05 | 6 | காளியம்மன் கோவில் தெரு | B | B |
| 23 | WD-05 | 7 | அருணகிரி தெரு | B | B |
| 24 | WD-06 | 1 | வடக்குமாட தெரு | **B** | A |
| 25 | WD-06 | 10 | தரணி தெரு | A | A |
| 26 | WD-06 | 11 | பர்வதராஜன் தெரு | B | B |
| 27 | WD-06 | 12 | தேசாய் தெரு | A | A |
| 28 | WD-06 | 2 | ஷெரீப் ஹுசேன் தெரு | A | A |
| 29 | WD-06 | 3 | ஆசாத் தெரு | **B** | A |
| 30 | WD-06 | 4 | புது மசூதி தெரு | **B** | A |
| 31 | WD-06 | 5 | அப்பண்ணன் தெரு | B | A |
| 32 | WD-06 | 6 | பெருமாள் கோவில் தெரு | B | B |
| 33 | WD-06 | 7 | வ.ஊ.சி. தெரு | A | A |
| 34 | WD-06 | 8 | பெரிய கடை தெரு | A | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 35 | WD-06 | 9 | கந்தசாமி தெரு | A | A |
| 36 | WD-07 | 1 | காளத்தி அண்ணாமலை தெரு | B | B |
| 37 | WD-07 | 2 | பெரிய கடை தெரு | A | A |
| 38 | WD-07 | 3 | ஆண்டாள் சன்னதி தெரு | A | A |
| 39 | WD-07 | 4 | அர்ஜுனன் தெரு | A | A |
| 40 | WD-07 | 5 | தணிகாசலம் தெரு | A | A |
| 41 | WD-07 | 6 | லிங்கப்பன் தெரு | A | A |
| 42 | WD-08 | 1 | அப்பால் தெரு | **B** | A |
| 43 | WD-08 | 10 | பெருமாள் கோவில் தெரு | A | A |
| 44 | WD-08 | 2 | பாப்பாத்தி அம்மன் கோவில் தெரு | **B** | A |
| 45 | WD-08 | 3 | பெரிய கடை தெரு | A | A |
| 46 | WD-08 | 4 | முனுசாமி தெரு | A | A |
| 47 | WD-08 | 5 | தொப்பை தெரு | A | A |
| 48 | WD-08 | 6 | கேசவன் தெரு | A | A |
| 49 | WD-08 | 7 | நைனா தெரு | A | A |
| 50 | WD-08 | 8 | சத்தியமூர்த்தி ரோடு | A | A |
| 51 | WD-08 | 9 | பரசுராமன் தெரு | B | B |
| 52 | WD-09 | 1 | ராமகிருஷ்ணா பேட்டை | **C** | B |
| 53 | WD-09 | 2 | சபியுல்லா தெரு | B | B |
| 54 | WD-10 | 1 | காஜிவாடை தெரு | B | B |
| 55 | WD-10 | 2 | நாராயணன் தெரு | B | B |
| 56 | WD-10 | 3 | முருகப்பன் தெரு | B | B |
| 57 | WD-10 | 4 | விநாயகர் கோவில் தெரு | B | B |
| 58 | WD-10 | 5 | அருணாச்சல ஈஸ்வரன் கோவில் தெரு | B | B |
| 59 | WD-10 | 6 | சத்தியமூர்த்தி ரோடு | A | A |
| 60 | WD-11 | 1 | பாட்சா தெரு | B | B |
| 61 | WD-11 | 2 | காண்டக்டர் பொன்னுசாமி தெரு | A | A |
| 62 | WD-11 | 3 | சத்தியமூர்த்தி ரோடு | A | A |
| 63 | WD-12 | 1 | மதவாராயண் பேட்டை தெரு | B | B |
| 64 | WD-12 | 2 | செல்வவிநாயகர் கோவில் தெரு | B | B |
| 65 | WD-12 | 3 | கல்யாணசுந்தரனார் தெரு | B | B |
| 66 | WD-12 | 4 | மேனேஜர் முருகேசன் தெரு | B | B |
| 67 | WD-13 | 1 | சின்னபட்டுநூலகார் தெரு | B | B |
| 68 | WD-13 | 2 | பாட்சா தெரு | B | B |
| 69 | WD-13 | 3 | காண்டக்டர் பொன்னுசாமி தெரு | A | A |
| 70 | WD-13 | 4 | ஔவையார் தெரு | **B** | A |
| 71 | WD-13 | 5 | சபாஸ்கான் தெரு | C | C |
| 72 | WD-13 | 6 | அருணகிரி தெரு | **B** | A |
| 73 | WD-13 | 7 | கண்ணப்பன் தெரு | B | B |
| 74 | WD-14 | 1 | திருவள்ளுவர் தெரு | C | C |
| 75 | WD-14 | 2 | கண்ணகி தெரு | C | C |
| 76 | WD-14 | 3 | செல்வவிநாயகர் கோவில் தெரு | B | B |
| 77 | WD-14 | 4 | சபாஸ்கான் தெரு | C | C |
| 78 | WD-15 | 1 | களத்துமேட்டு தெரு | C | C |
| 79 | WD-15 | 2 | பெரிய தெரு | B | B |
| 80 | WD-16 | 1 | பழநிஆண்டவர் கோவில் தெரு | A | A |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 81 | WD-16 | 2 | மல்லிபிள்ளையார் கோவில் தெரு | A | A |
| 82 | WD-16 | 3 | வேதபுரிஈஸ்வரன் கோவில் தெரு | B | B |
| 83 | WD-16 | 4 | கோகுலபாலன் தெரு | **C** | B |
| 84 | WD-16 | 5 | திருப்பூர் குமரன் தெரு | B | B |
| 85 | WD-16 | 6 | சின்ன தெரு | C | C |
| 86 | WD-17 | 1 | அப்பர் தெரு | B | B |
| 87 | WD-17 | 2 | மருசுரான் தெரு | B | B |
| 88 | WD-17 | 3 | கொசபாளையம் தருமராஜா கோவில் தெரு | A | A |
| 89 | WD-17 | 4 | கோபால் தெரு | B | B |
| 90 | WD-17 | 5 | பெரிய சாயக்கார தெரு | B | A |
| 91 | WD-18 | 1 | டாக்டர் அம்பேத்கர் நகர் | C | C |
| 92 | WD-18 | 2 | சத்தியமூர்த்தி ரோடு | A | A |
| 93 | WD-19 | 1 | சின்ன சாயக்கார தெரு | B | B |
| 94 | WD-19 | 2 | சுந்தரம் தெரு | A | A |
| 95 | WD-19 | 3 | பெரிய சாயக்கார தெரு | B | A |
| 96 | WD-19 | 4 | வடியராஜா தெரு | C | C |
| 97 | WD-20 | 1 | பாரதியார் தெரு | B | B |
| 98 | WD-20 | 2 | விஸ்வேஸ்வரையர் தெரு | **B** | B |
| 99 | WD-20 | 3 | சூரியகுளம் கிழக்கு தெரு | A | A |
| 100 | WD-20 | 4 | சூரியகுளம் வடக்கு தெரு | A | A |
| 101 | WD-20 | 5 | தாண்டவராயன் தெரு | B | B |
| 102 | WD-20 | 6 | ரூப்சிங் தெரு | B | B |
| 103 | WD-20 | 7 | அன்னை வாத்தியார் தெரு | B | B |
| 104 | WD-20 | 8 | கார்த்திகேயன் ரோடு | B | A |
| 105 | WD-21 | 1 | தியாகி சுப்ரமணியம் தெரு | A | A |
| 106 | WD-21 | 2 | உசேல் தெரு | B | B |
| 107 | WD-21 | 3 | தென்னமர தெரு | A | A |
| 108 | WD-21 | 4 | பாதர் சுபேதார் தெரு | A | A |
| 109 | WD-21 | 5 | ஆர். ஸ்ரீனிவாசன் தெரு | A | A |
| 110 | WD-21 | 6 | ஒத்தவாடை தெரு | B | B |
| 111 | WD-21 | 7 | மாரியம்மன் கோவில் தெரு | B | B |
| 112 | WD-22 | 1 | சி.தாண்டவராயன் தெரு | B | B |
| 113 | WD-22 | 2 | சி.முனுசாமி தெரு | B | B |
| 114 | WD-22 | 3 | பொன்னுசாமி தெரு | B | B |
| 115 | WD-22 | 4 | கோவிந்தராஜன் தெரு | B | B |
| 116 | WD-22 | 5 | அப்பாசாமி தெரு | B | B |
| 117 | WD-22 | 6 | சாமி தெரு | B | B |
| 118 | WD-22 | 7 | சின்ன கடை தெரு | B | B |
| 119 | WD-23 | 1 | சுப்ரமணிய சுவாமி கோவில் தெரு | C | C |
| 120 | WD-23 | 2 | இளங்கோ தெரு | C | C |
| 121 | WD-23 | 3 | குங்கிளியர் தெரு | C | C |
| 122 | WD-23 | 4 | நரசிம்மன் தெரு | B | B |
| 123 | WD-24 | 1 | பாரதியார் தெரு | B | B |
| 124 | WD-24 | 2 | தாது தெரு | **C** | B |
| 125 | WD-25 | 1 | சைதை பெருமாள் கோவில் தெரு. | B | B |
| 126 | WD-25 | 2 | சைதை கந்தசாமி தெரு | B | B |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 127 | WD-25 | 3 | சைதை பிள்ளையார் கோவில் தெரு | B | B |
| 128 | WD-25 | 4 | கார்த்திகேயன் ரோடு | B | A |
| 129 | WD-25 | 5 | சைதை சுப்ரமணியம் தெரு. | C | C |
| 130 | WD-25 | 6 | சீத்தாராமன் தெரு | C | C |
| 131 | WD-25 | 7 | மலையாம்பட்டு ரோடு | **C** | B |
| 132 | WD-25 | 8 | கோவிந்தன் தெரு | C | C |
| 133 | WD-25 | 9 | பஜனை கோவில் தெரு | C | C |
| 134 | WD-26 | 1 | பவர் ஹவுஸ் தெரு | B | B |
| 135 | WD-26 | 2 | கார்த்திகேயன் ரோடு | B | A |
| 136 | WD-26 | 3 | நாடகசாலை பேட்டை தெரு | B | A |
| 137 | WD-26 | 4 | மேட்டு தெரு | B | B |
| 138 | WD-27 | 1 | கார்த்திகேயன் ரோடு | B | B |
| 139 | WD-27 | 3 | முள்ளிப்பட்டு ரோடு | C | C |
| 140 | WD-27 | 4 | சைதை சுந்தரம் தெரு | C | C |
| 141 | WD-27 | 5 | வீரபத்திரன் தெரு | C | C |
| 142 | WD-27 | 6 | கமண்டல நாகநதி தெரு | C | C |
| 143 | WD-28 | 1 | அனந்தபுரம் தருமராஜா கோவில் தெரு | **C** | B |
| 144 | WD-28 | 2 | முள்ளிப்பட்டு ரோடு | **C** | B |
| 145 | WD-28 | 3 | முள்ளிப்பட்டு ரோடு | **C** | B |
| 146 | WD-28 | 4 | சைதை பள்ளிகூட தெரு | C | C |
| 147 | WD-28 | 5 | அனந்தபுரம் தெரு | C | C |
| 148 | WD-29 | 1 | காந்தி நகர் முதல் தெரு | C | C |
| 149 | WD-29 | 2 | காந்தி நகர் இரண்டாவது தெரு | C | C |
| 150 | WD-29 | 3 | காந்தி நகர் மூன்றாவது தெரு | C | C |
| 151 | WD-29 | 4 | கார்த்திகேயன் ரோடு | B | A |
| 152 | WD-30 | 1 | வி.ஏ.கே.நகர் | B | B |
| 153 | WD-30 | 2 | பாஸ்கர் நகர் | B | B |
| 154 | WD-30 | 3 | கே.பி.கே.நகர் | B | B |
| 155 | WD-30 | 4 | ஜெயலட்சுமி நகர் | B | B |
| 156 | WD-30 | 5 | பள்ளிகூட தெரு | B | B |
| 157 | WD-30 | 6 | கோட்டை மேற்கு தெரு | C | C |
| 158 | WD-30 | 7 | எம்.ஜி.ஆர் நகர் | A | A |
| 159 | WD-31 | 1 | கோட்டை தெற்கு தெரு. | C | C |
| 160 | WD-31 | 2 | கோட்டை மேற்கு தெரு. | C | B |
| 161 | WD-32 | 1 | கோட்டை கிழக்கு தெரு | C | B |
| 162 | WD-32 | 2 | பள்ளிகூட தெரு | B | B |
| 163 | WD-32 | 3 | கோட்டை வடக்கு தெரு | C | C |
| 164 | WD-32 | 4 | காந்தி ரோடு | A | A |
| 165 | WD-33 | 1 | பள்ளிகூட தெரு | B | B |
| 166 | WD-33 | 2 | பள்ளிகூட தெரு-II | B | B |

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி

கூட்ட எண் 09
2018 - 2019 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 28.09.2018.

**2018-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28.09.2018.ந் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

1. இந்நகராட்சி ஆணையர் அவர்களின் ஆகஸ்டு 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்டு 2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN25AX9318 இல் உள்ள குளிர்சாதனம் மற்றும் இதர பாகங்கள் பழுது ஏற்ப்பட்டுள்ளது. மேலும் வாகனத்தில் ஆயில் சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளது. எனவே, அவ்வாகனத்தை கொள்முதல் செய்த நிறுவனமான ஜெயின் கார்ஸ், திருவண்ணாமலை கிளையில் விட்டு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச தோராய செலவினம் ரூ.95,540/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வாகனத்தை பழுது நீக்கம் செய்த நிறுவனத்திற்கு தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 634/2016/இ1)

4. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் செய்யாறு அவர்களின் கடிதம் ந.க.எண் 2833 / இ4/ 2013 நாள் 05.07.2018 மற்றும் களப்பணி உதவியாளர் குறிப்பின்படியும், நகர பகுதிகளில் நோய் தடுப்பு பணிகள் பாதிக்காத வகையில் 18.06.2018 முதல் டிசம்பர் 2018 வரை ஏழு மாதங்களுக்கு 30 எண்ணிக்கை தற்காலிக பணியாளர்களை நியமித்து டெங்கு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ. 12.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. பொது சுகாதாரம் டெங்கு மற்றும் சிக்குன் குனியா நோய் தடுப்பு பணி அத்தியாவசியம் என்பதால் 18.06.2018 முதல் டிசம்பர் 2018 வரை 30 எண்ணிக்கை தற்காலிக பணியாளர்களை பணியமர்த்தி கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (கோப்பு எண் 1537 / 2012 / எச்1)

5. இந் நகராட்சியின் அனைத்து பிரிவு பணியாளர்களுக்கு 2007 - 2008ம் ஆண்டு முதல் தணிக்கை முடிவு பெற்ற 2017- 2018ம் ஆண்டு வரையிலான சேமநல நிதிக்கான வட்டி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 3506/2001/பி2)

6. ஆரணி நகராட்சி பொறியியல் பிரிவில் கையிறைப்பான் உதிரி பாகங்கள், சிறுமின்விசை பம்பின் உதிரி பாகங்கள் மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் அனைத்தும் பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பொருட்கள் 12.09.2018 அன்று பொது ஏலம் விடப்பட்டது. பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் கோரியவர்கள் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் திருவாளர்கள் | ஏலம் கோரிய தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சுபானி ஸடீல் டிரேடர்ஸ், சூரியகுளம் தெற்கு தெரு, ஆரணி | 2,14,800/- |
| 2 | JCB ஸ்டீல்ஸ், 3/1சி கார்த்திகேயன் ரோடு, ஆரணி | ஏலம் கோரவில்லை |

| | | |
|---|---|---|
| 3 | ரஹ்மான் ஸ்டீல் டைசர், கண்ணப்பன் தெரு, அருணகிரி சத்திரம், ஆரணி | ஏலத்தில் கலந்து கொள்ளவில்லை |
| 4 | ஏ. செந்தில்குமார், 607 பஜனை கோயில் தெரு, பையூர், ஆரணி | ஏலம் கோரவில்லை |
| 5 | எஸ். ஜியாவுதின் SZN பழைய இரும்பு, ஆரணி | 2,17,100/- |
| 6 | ஜி. பாஸ்கரன், காந்தி நகர், ஆரணி | 2,12,600/- |
| 7 | ஏ.மொய்தின் உசேன், கோட்டை வீதி, ஆரணி | 2,12,300/- |
| 8 | எஸ். ஜாக்கீர் உசேன் SJN டிரேடர்ஸ், ஆரணி | 2,13,100/- |
| **9** | **ஏ.ஷபியுல்லா, 1/எ கார்த்திகேயன் ரோடு, ஆரணி** | **2,17,400/-** |
| 10 | மெரிட் ஸ்டீல்ஸ் 94F கோட்டை வடக்கு தெரு, ஆரணி | 2,17,000/- |
| 11 | அ. முஹமத் நவீத், 7பி விஸ்வேஸ்வரய்யா தெரு, ஆரணி | ஏலம் கோரவில்லை |
| 12 | அப்துல் காதர், 37, என்.எஸ. நகர், பாரதியார் தெரு பின்புறம், ஆரணி | 2,11,400/- |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டவர்களில் வரிசை எண் 9ல் காணும் திரு. ஏ.ஷபியுல்லா என்பவரின் உச்ச ஏலக் கேள்வியினை மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு எண் 761/2018/இ1)

7. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் மகப்பேறு ஆயாவாக பணி புரிந்து வயது முதிர்வு காரணமாக 30.06.2018ல் ஓய்வு பெற்ற திருமதி. R. பச்சை என்பவர்கு 1) சிறப்பு சேமநல நிதி அசல் ரூ. 2960/- 2) சிறப்பு சேமநல நிதி அசலகான வட்டி ரூ. 15470/- 3) நிர்வாக பங்குத் தொகை ரூ. 10000/- ஆக மொத்தம் ரூ. 28430/- ஐ வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 2087/பி2/2018)

8. ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பயன்பாட்டில் இருந்து வரும் டிராக்டர் TN25W 6280 வருடாந்திர இன்சூரன்ஸ் வரும் 27.09.2018 அன்றுடன் நிறைவடைகிறது. மேற்படி இன்சூரன்ஸ் 28.09.2018 முதல் 27.09.2019 வரை ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள ஆகும் செலவினம் ரூ. 11035/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட் நிறுவனத்திற்கு தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.
(கோப்பு எண் 634/இ1/2016)

9. இந்நகராட்சி பகுதியில் உள்ள வண்டிமேடு (மார்கெட் செல்லும் வழி) சாலையின் நடுவே பொது மக்களுக்கு போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மின் கம்பத்தினை மாற்றி அமைக்க உதவி மின்பொறியாளர் இப / நகரம் / கிழக்கு திமிபவ / ஆரணி அவர்களின் கடிதத்தில் மதிப்பீடு ரூ. 66891/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 525/2018/இ1)

10 ஆரணி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 13 சபாஷ்கான் தெருவில் அமைந்துள்ள பூங்கா மற்றும் வார்டு எண் 18ல் உள்ள பூங்கா ஆகிய இடங்களில் உள்ள முட்புதர்கள், செடிகொடிகளை அப்புறப்படுத்தி சுத்தம் செய்திட ஆகும் தோராய செலவினம் ரூ.30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி பணிகள் மேற்கொள்ள உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 7612018/இ1)

11. ஆரணி நகராட்சியின் மையப் பகுதியில் உள்ள சூரியகுளத்தின் படிகள் சேதமடைந்துள்ளது மற்றும் சூரியகுளத்தின் வடக்கு பகுதி கார்த்திகேயன் சாலை பிரதான சாலையில் சுற்றுச் சுவர் இல்லாமல் உள்ளது. இதனால் பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் செல்வதற்கு மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதி சூரியகுளத்தின் படிகளை சரி செய்து, சுற்றுச் சுவர் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.12.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் (கோப்பு எண் 7612018/இ1)

12. ஆரணி நகராட்சி பாலாஜி நகர் பூங்கா, காந்தி நகர் பூங்கா, கே.பி.கே நகர் பூங்கா, மற்றும் மாடு அடிக்கும் இடம் ஆகிய இடங்களில் உள்ள முட்புதர்கள் மற்றும் கழிவுகளை JCB இயந்திரம் மூலம் அகற்றி சமன் செய்திட ஆகும் தோராய செலவினம் ரூ.75000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் (கோப்பு எண் 7612018/இ1)

13. ஆரணி நகராட்சி வார்டு எண் 32ல் உள்ள புதிய பேருந்து நிலையத்தில அமைக்கப்பட்டுள்ள அம்மா உணவகம் கட்டடம் திறப்பு விழா மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்கள் வருகையையோட்டி முன்னேற்பாடாக சாமியானா பந்தல், ஒலி பெருக்கி, வண்ணத்தோரணங்கள், சேர், மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.10000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேலும், மேற்படி பணிகள் மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் செய்து முடித்ததை மன்றம் ஏற்கலாம். மேற்படி செலவினம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்த மேற்கொள்ளவும்அனுமதிக்கலாம் (கோப்பு எண் 7612018/இ1)

14. ஆரணி நகராட்சி வார்டு எண் 09 சபுயுல்லா தெருவில் உள்ள அம்சவேணி அம்மாள் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் உள்ள இரும்பு கிரில் கேட் பழுதடைந்துள்ளது அதனை சரி செய்யவும், கேட்டினை தாங்குவதற்கு காண்கிரீட்டிலான தூண்கள் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.50000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், மேற்படி செலவினம் நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் (கோப்பு எண் 7612018/இ1)

15. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு எல்லைகள் மறுவரையறை செய்ய தமிழநாடு அரசால் அமைக்கப்பட்ட வார்டு எல்லை மறுவரையறை ஆணையத்தின் உத்தரவு எண் D.C. ORDER. 1/2017/TNDC/EG-1, நாள் 12.09.2017-இல் வார்டு எல்லைகளை மறுவரையறை செய்வதற்கான விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் நிலையில் உள்ள குடியிருப்புகளின் அடிப்படையில் மறுவரையறை செய்முறை வரைவு வார்டு எல்லை மறுவரையறை கருத்துரு மற்றும் இறுதி வார்டு எல்லை மறுவரையறை கருத்துரு ஆகியன மாவட்ட வார்டு வரையறை அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் வழிமுறையாக உறுப்பினர் - செயலர், மறுவரையறை ஆணையம், சென்னை -106 அலுவலகத்தில் சமர்ப்பிக்க மேற்காணும் ஆணைய கடித ந.க.எண் 3174 /2017 / EG-1,இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கருத்துருக்களை சமர்ப்பிக்க உரிய வார்டு வண்ணப்படங்கள், நகர வரைபடம் வண்ணப்படமாக மற்றும் ஆவணங்கள் தயார் செய்ய தோராய செலவினம் ரூ. 50,000 /-க்கு இந் நகர மன்றத் தீர்மானம் எண் 155 நாள் 29.12.2017இல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. பொது மக்களின் கருத்துக் கேட்பு ஆட்சேபனை மற்றும் ஆலோசனைகளுக்குப்பின் நகர வரைபடம் மற்றும் வார்டு வாரியான வரைபடங்கள் திருத்தம் செய்து வண்ணப்படங்களாக வரைவு வார்டு மறுவரையறை மற்றும் இறுதி வார்டு மறுவரையறை கருத்துக்களை மறுவரையறை ஆணையம், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மற்றும் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர், ஆகியோர்களுக்கு வார்டு வாரியான வண்ணப்படங்கள், நகர வரைபடம் வண்ணப்படமாக மற்றும் ஆவணங்கள் புத்தக வடிவில் தயாரித்து அளிக்க ரூ. 76,170 /- செலவிடப்பட்டுள்ளது. மேற்காணும் பணிக்கு இந் நகர மன்றத் தீர்மான எண் 155 நாள்

29.12.2017இல் தோராய செலவினம் ரூ. 50,000/-க்கு மன்றம் ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்காணும் பணியை முடிக்க ஆன கூடுதல் செலவினம் ரூ. 26,170/-க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது..

அலுவலக குறிப்பு :- இச் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி நிதி தேர்தல் ஆணையத்தால் வழங்கும் பட்சத்தில் இத் தொகையினை ஈடு செய்து கொள்ளலாம். (கோப்பு எண் 1720/எப்1/2017)

16. இந் நகராட்சிக்கு சொந்தமான பெரியார் மாளிகை கடை எண் -5, பழைய மார்க்கெட் மேல்மாடி கடை எண்கள் -7 மற்றும் 28, அண்ணா சிலை பின்புறம் உள்ள கடை எண்கள் - 10,11 மற்றும் 15, பழைய பேருந்து நிலைய கடை எண் -11 ஆகிய மேற்படி 7 கடைகளை தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து மேற்படி கடை குத்தகைதாரர்கள், நகராட்சி வசம் கடைகளை ஒப்படைத்து விட்டனர். வருவாய் ஆய்வாளரின் குறிப்பின்படி, மேற்படி, கடைகள் நகராட்சிக்கு வருவாய் ஈட்டத்தக்க வகையில் கடைகளுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்து புதியதாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி கடைகளுக்கு குத்தகைதாரர்கள் ஒப்படைத்த நாள் முதல் கேட்பினை கணிணியில் இருந்து நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1827 / அ3 / 2018)

18) ஆரணி நகராட்சி பழைய பேருந்து நிலையத்தின் நுழைவு வாயில் அருகில் உள்ள சிறுபாலத்தில் அமைக்கப்பட்டிருந்த MS Slab உடைப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பேருந்துகள் உள்ளே வந்து செல்வதற்கும், பொது மக்களுக்கும் இடையூறாக உள்ளது. எனவே, அதனை அகற்றி விட்டு புதியதாக RCC Slab அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ. 30000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். அப்பணியினை அவசர அவசியம் கருதி இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. அ.அசோக்குமார் மூலம் ஒப்படைப்பு பணியாக செய்து முடிக்கவும் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 761/ 2018/இ1)

தனி அலுவலர்,
ஆரணி நகராட்சி.